இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 12.11.2026

பட்டாசு சத்தத்தை விட பட்டாக்கத்திகளின் சத்தமே அதிகம்!

தீபாவளி நாளன்று மட்டும் தமிழ்நாட்டில் 15 படுகொலைகள் நடந்து மாநிலத்தையே பதற்றத்தில் ஆழ்த்தி உள்ளது. அதனால் தான், 'பட்டாசு சத்தத்தை விட பட்டாக்கத்திகளின் சத்தமே அதிகம்' என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி மிகமிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார். த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டை படம்பிடிக்க இந்த ஒரு சொற்றொடர் போதும். எவ்வளவு சொன்னாலும் சொரணை வரப்போவது இல்லை என்பது வேறு!

இந்த மாநிலத்தில் ஒரு ஆட்சி இருக்கிறதா, முதலமைச்சர் இருக்கிறாரா, அவருக்கு ஆளத் தெரியுமா, ஆட்சி என்றால் என்ன என்று தெரியுமா, உள்துறை அவர் கையில் இருக்கிறதா, காவல் துறை இருக்கிறதா, ஊர் ஊருக்கு காவல் நிலையங்கள் இருக்கிறதா என்றே தெரியவில்லை. கொத்துக் கொத்தாக கொலை நடக்கிறது. கொள்ளை நடக்கிறது. வழிப்பறி நடக்கிறது. அரிவாள் வெட்டுகளுக்கு அளவே இல்லை.

ஆட்சி இல்லை, போலீஸ் செயல்படவில்லை என்றால் தான் கொத்துக் கொத்தாக கொலைகள் நடக்கும். கேட்டால், 'தீபாவளி போன்ற திருவிழா நாளில் இது போன்ற கொலைகள் நடக்கத் தான் செய்யும்' என்று சொல்கிறார் அமைச்சர் ராஜ்மோகன். 'இனிமேல் சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் கொலைகள் நடக்கத்தான் செய்யும்' என்றும் சொல்வார். 'இரவு நேரங்களில் கொலைகள் நடப்பது சாதாரணம்' என்றும் அவர் சொல்லலாம். த.வெ.க. ஆட்சியில் கிரிமினல் தனங்கள் நாளுக்கு நாள் அதிகம் ஆகி வருகின்றன.

தீபாவளி நாளின் போது மட்டும் 15 கொலைகள் அரங்கேறி இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

* தேனியில் சாலையை மறித்து பட்டாசு வெடித்து ரீல்ஸ் எடுத்த போதை கும்பலை, தட்டிக்கேட்ட காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.
* திருச்சி மாவட்டம் சமயபுரம் சுங்கச்சாவடி அருகே ராகுல், விஷால் ஆகிய 2 சிறுவர்கள் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.
* திருச்சி சமயபுரம் அருகே புறத்தாக்குடியில் பட்டாசு வெடிப்பதில் ஏற்பட்ட மோதலில் ஜ.டி. ஊழியர் கிறிஸ்டோபர் என்பவர் ஸ்பேனர் வைத்துக் குத்திக் கொலை செய்யப்பட்டார்.
* சென்னை பெரம்பூர் முதலமைச்சர் விஜய் தொகுதி, பெரம்பூர் தொகுதிக்கு உட்பட்ட வியாசர்பாடியில் தனுஷ் எனும் 18 வயது இளைஞர் ஓட ஓட வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.
* கடலூர் மாவட்டம் பெரிய கட்டுப்பாளையத்தில் மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில் பிரித்விராஜ் என்ற 26 வயது இளைஞர் குத்திக் கொலை செய்யப்பட்டார்.
* சிவகங்கை மாவட்டம் முருகபாஞ்சான் கிராமத்தில் விக்னேஷ் என்ற இளைஞரும், கல்லல் அருகே 25 வயதான நவீன் என்பவரும் மர்ம கும்பலால் ஓட ஓட விரட்டிக் கொலை செய்யப்பட்டனர்.
* திருவள்ளூர் மாவட்டம், பென்னலூர் பேட்டை காப்புக்காடு பகுதியில் மணிமேகலை எனும் 24 வயது பெண் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டார்.
* நெல்லை மாவட்டம் முக்கூடல் அருகே பாப்பாபட்டியில் வனோபி என்ற பெண் படுகொலை செய்யப்பட்டார்.
* திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே சுவேதா என்ற பெண் கழுத்தில் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.
* கள்ளக்குறிச்சி மாவட்டம் தியாகதுருகம் அருகே நின்னையூரில் பால சுப்ரமணியன் என்பவர் படுகொலை செய்யப்பட்டார்.
* பெரம்பலூர் அருகே நொச்சியம் கிராமத்தில் 50 வயதான ரவி என்பவர் படுகொலை செய்யப்பட்டார்.
* காஞ்சிபுரம் திருகாலிமேடு நேதாஜி நகரைச் சேர்ந்த பார்த்திபன் என்பவர் தலையில் கல்லை போட்டு கொடூரமாக கொலை செய்யப் பட்டார். அவரது உடல் திருகாலிமேடு அருகே ரயில்வே தண்டவாளம் அருகே மீட்கப்பட்டது.
* விருதுநகர் அருகே பாலவனத்தம் கிராமத்தில் தீபாவளி நாளன்று மது அருந்தும்போது ஏற்பட்ட தகராறில் அன்பு செல்வம் எனும் 25 வயது இளைஞர் கீழே தள்ளி கழுத்தில் மிதித்து கொலை செய்யப்பட்டார்.

இதுதான் த.வெ.க. ஆட்சியின் தீபாவளி க்ரைம் பட்டியல்.

'திராவிட மாடல்' புத்தகம் எழுதிய கலையரசனைக் கைது செய்ய அதிகாலையில் முடுக்கிவிட்ட போலீஸார் எங்கே போனார்கள்? நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகாவை நள்ளிரவில் கைது செய்த காவலர்கள் எங்கே போனார்கள்? ஆட்சிக்கு எதிராக ட்வீட் போட்டால் படை அனுப்பி கைது செய்தீர்களே அந்த போலீஸார் எங்கே போனார்கள்? அவர்களை எல்லாம் வீட்டுக்குள் போட்டு பூட்டி வைத்து விட்டாரா போலீஸ் துறை அமைச்சர் மிஸ்டர் விஜய்?

சட்டம், ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து கொலை சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். தேனியில் கொல்லப்பட்டவர் காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளர். போலீஸ் துறையை கையில் வைத்துள்ள விஜய் வெட்கப்பட வேண்டாமா?

சமயபுரம் சுங்கச் சாவடியில் கொலை செய்யப்பட்டவர்கள் இரண்டு சிறுவர்கள். சின்னப்பிள்ளைகளை மயக்கி, குடும்பத்தினரை ஏமாற்ற வைத்த விஜய் இதற்கு வெட்கப்பட வேண்டாமா? முதலமைச்சராக பொறுப்புக்கு வந்ததும், சிறுவர் சிறுமியருக்கு தானே இவர் நன்றி சொன்னார். இவரது ஆட்சியில் சிறுவர்கள் கொலை செய்யப்படுகிறார்கள். சிறுமிகள் கடத்தப்படுகிறார்கள்.

தலைநகர் சென்னையில், தனது சொந்தத் தொகுதியான பெரம்பூரில் கூட சட்டம் ஒழுங்கை காப்பாற்றத் தெரியவில்லை. 18 வயது இளைஞர் ஓடஓட விரட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். தேர்தலுக்கு முன்னால் போய் கோலம் போட்டாரே விஜய். இப்போது கொலை நடக்கிறதே. தடுக்க முடிந்ததா? தடுக்க என்ன செய்தார்?

பெண்கள் பாதுகாப்பு பற்றி வாய்கிழியப் பேசினாரே விஜய். பென்னலூர் பேட்டையில் கழுத்தறுக்கப்பட்ட மணிமேகலை, முக்கூடலில் கொலை செய்யப்பட்ட வனோபி, வேடசந்தூரில் கழுத்தில் வெட்டி கொலை செய்யப்பட்ட சுவேதா இவர்கள் மரணம் யாருடைய கையாலாகாத்தனத்தால் நடந்தது?

இந்தக் கொலைகளுக்கு அடிப்படைக் காரணமாக இருந்திருப்பது போதை. தடுக்கப்பட்டதா போதை மருந்துகள் இந்த ஆறு மாத காலத்தில்?

அவர் முதலமைச்சரும் அல்ல, அவர் நடத்துவது ஆட்சியும் அல்ல என்று நவம்பர் 8 ஆம் தேதி மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

●●

சட்டம் – ஒழுங்கு சீர்கேட்டால் பெண்கள் – குழந்தைகள் – பெரியவர்கள் என

யாருக்குமே பாதுகாப்பு இல்லாத சூழல் த.வெ.க. ஆட்சியில்!

பொறுப்பற்ற நிர்வாகத்தால் அனைத்தும் தோல்வி என கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி, கடும் கண்டனம்!

சென்னை, நவ. 12- தமிழகத்தில் தொடர்ந்து அதிகரித்துவரும் சட்டம் - ஒழுங்கு பிரச்சினைகள்; பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள்; பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுக்கப்படும் நீதி; குற்ற வாளிகளுக்குத் துணைபோகும் ஆளுங்கட்சியினர்; பொறுப்பற்ற நிர்வாகத்தால் வெளிப்படும் த.வெ.க. அரசின் தோல்விகள் என கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர்,

இந்த அரசாங்கத்தில் இருக்கக்கூடிய ஒரு அமைச்சர், ஏதோ வளர்ச்சியைப் பற்றிப் பேசுவதைப் போல, கடந்த ஆண்டு இப்படித்தான் இருந்தது, அதற்கு முந்தைய ஆண்டு இப்படித் தான் இருந்தது, இந்த ஆண்டு இப்படித்தான் இருக்கிறது என்று ஒப்பிட்டுப் பேசுகிறார்.

ஒரு பிரச்சினையைச் சரி செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கக்கூடியவர்கள், அதை மிகவும் சாதாரணமான ஒரு விஷயமாகக் கருதி இயல்பாக்க முயற்சிப்பது மிகவும் வருத்த மளிக்கிறது. அவர்களுக்கு இதனைச் சரிசெய்ய வேண்டும் என்ற எண்ணம்கூட இல்லை. இந்தப் பிரச்சினையிலிருந்து எப்படியாவது ஒரு காரணத்தையோ அல்லது சாக்குப்போக்கையோ கூறி தங்களை நியாயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவர்களுடைய நோக்கமாக இருக்கிறதே தவிர, தங்களைத் திருத்திக்கொள்வதற்கான எந்த முயற்சியும் அவர்களிடம் இல்லை.

ஆறு மாத காலத்தில் த.வெ.க.வினரின் குற்றச் செயல்!

எங்களுக்கு ஆறு மாத கால அவகாசம் கொடுங்கள், நாங்கள் எல்லாவற்றையும் கற்றுக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், நீங்கள் கற்றுக்கொண்டிருப்பது தமிழ் நாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய விஷயங்களைத் தான். ஏனென்றால், பெரும்பாலான குற்றச்செயல்களில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், கள்ளக்குறிச்சி கலவரத்தின்போதும் உரிய நடவடிக்கை எடுக்காத சூழலை நாம் பார்த்திருக்கிறோம்.

பொதுவாக, தீபாவளி அன்று நடைபெற்ற ஒரு சம்பவத்தையும் நாம் பார்க்கிறோம். பாதிக்கப்பட்ட நபர் அவருடைய வீட்டிற்கே அழைத்துச் செல்லப்பட்டு, மிரட்டப்பட்டு, ஒரு வீடியோவை வெளியிட வைத்ததாகக் கூறப்படும் நிலையில், தற்போது அதுதொடர்பாக மற்றொரு வீடியோவும் வெளியாகியுள்ளது.

அதேபோல, இந்த அரசாங்கத்தில் இருக்கக்கூடிய சிலரையும், அரசு அலுவலகங்களில் நடை பெறும் செயல்பாடுகளையும், எம்.எல்.ஏ.க்களையும் விமர்சித்துப் பல பெண்கள் புகார் தெரிவிக்கும்போது, அவர்களை மிரட்டி வழக்கு களைத் திரும்பப் பெற வைக்கக்கூடிய சூழலையும் நாம் பார்த்திருக்கிறோம். குறிப்பாக, தூத்துக் குடி மாவட்டம் திருவைகுண்டத்தில்கூட இதுபோன்ற சம்பவங்களைப் பார்த்திருக்கிறோம். அங்கு மட்டுமின்றி பல்வேறு இடங்களில் ஆளுங்கட்சியினரை எதிர்த்துக் குற்றச்சாட்டுகளை முன்வைப்ப வர்கள் கைது செய்யப்படுவதும், மிரட்டப்படுவதும் தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.

மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பு இல்லை!

இந்தச் சூழல் எங்கே போய் முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஒரு மாவட்ட ஆட்சியருக்கே எதுவுமே நடக்கவில்லை என்று எம்.எல்.ஏ. ஒருவர் பேசுகிறார். அப்படியானால் திடீரென்று ஒரு மாவட்ட ஆட்சியருக்கு, காவல்துறை அதிகாரியைக்கூட மாற்றி, இத்தனை நாட்களாக இல்லாமல் புதிதாக ஒருவரை நியமித்து அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியம் என்ன என்பதும் புரியவில்லை. இதற்கும் ஏதாவது ஒரு திரைக்கதையை எழுதி, வசனத்தைத் தயாரித்து ஏதாவது ஒரு விளக்கத்தை அளிக்கலாம். இப்படிப்பட்ட சூழலில், ஒரு அரசு அதிகாரியாக இருப்பவருக்கே பாதுகாப்பு இல்லாத நிலை உருவாகியுள்ளது.

த.வெ.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் தமிழ்நாட்டில் பெண்கள், குழந்தைகள் என அனைவரும் பாதுகாப்பாக இருப்பார்கள்; இங்கு குற்றங்களே நடைபெறாது; ஒரு ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் நாட்டை வைத்திருப்பேன் என்று கூறினார்கள்.

தமிழ்நாட்டை சூறையாடும் த.வெ.க.!

முன்பெல்லாம் ஒரு எதிரி நாட்டின் மீது படையெடுக்கும் போது, அந்த நாட்டில் படையெடுக்கும் ராணுவத்தினர் எத்தகைய அட்டூழியங்களில் ஈடுபடுவார்கள் என்பதைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்போம். அது போன்ற ஒரு சூழல்தான் இன்று தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏதோ தமிழ்நாட்டிற்கு எதிராகப் படையெடுத்து, த.வெ.க. இன்று தமிழ்நாட்டையே சூறையாடிக் கொண்டிருப்பதைப் போன்ற ஒரு நிலை உருவாகியுள்ளது.

சட்டம் - ஒழுங்கு என்பது பெண்கள், குழந்தைகள், பெரியவர்கள் என அனைவருக்கும் பாதுகாப்பு அளிப்பதாக இருக்க வேண்டும். ஆனால், இன்று யாருக்குமே பாதுகாப்பு இல்லாத சூழல்தான் நிலவுகிறது. எத்தனையோ கொலைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

இத்தகைய சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த ஆட்சியில் யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதுதான் உண்மை. ஆறு மாதங்களுக்கு முன்பாகவும் இதுகுறித்து ஒரு வாக்குறுதி அளிக்கப்பட்டது. இனிமேலாவது கொஞ்சம் பொறுப்புடன் செயல்படுங்கள் எனக் கூறினார்.



மேனாள் மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சீரிய முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ள குறிஞ்சி நலம் மருத்துவத் தொண்டு நிறுவனத்தின் சார்பில் கடந்த மாதம் அக்டோபர் 25 அன்று தேனி மாவட்டம், குரங்கனி மலைப்பகுதியில் மலைவாழ் மக்களைத்தேடி சிறப்பு மருத்துவர்களின் மாபெரும் அணிவகுப்பு எனும் பொருளில் நடைபெற்ற மருத்துவ முகாமில் கண் மருத்துவப் பரிசோதனையில் கண்டறியப்பட்ட மருத்துவ பயனாளிகள் 37 பேருக்கு நேற்று முன்தினம் (10.11.2026) மேனாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களிடம் 37 கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

சட்டம் – ஒழுங்கை 'டம்மி மாமா' குப்புற தள்ளிவிட்டுள்ளார்!

தற்குறிகளுக்கு வாய் மட்டும்தான் வேலை செய்கிறது!

தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!

சென்னை, நவ. 12- ஆறு மாதத்தில் சட்டம் ஒழுங்கை டம்மி மாமா குப்புற தள்ளிவிட்டுள்ளதாக தி.மு.க. ஐ.டி. விங் விமர்சித்துள்ளது.

த.வெ.க. ஆட்சியில் 6 மாதத்திற்குள் சட்டம் - ஒழுங்கு நாட்டிற்கே உதாரணமாக இருக்கும் என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சட்டசபையில் முன்பு வாய்ச்சவாடல் விட்டிருந்ததை எடுத்துக்காட்டியும், தற்போது ஒரே நாளில் 19 கொலைகள் அரங்கேறியுள்ளதாக பத்திரிகைகளில் வெளியாகி உள்ள செய்திகளை சுட்டிக்காட்டியும் தி.மு.க. ஐ.டி. விங் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில்,

தற்குறிகளுக்கு வாய் மட்டும்தான் வேலை செய்வதாக சாடியுள்ளது.

டம்மி மாமா ஆறு மாதத்தில் சட்டம் ஒழுங்கை குப்புற தள்ளி விட்டதாகவும் தி.மு.க. ஐ.டி. விங் விமர்சித்துள்ளது.

